
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1167

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

166

`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நம் முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

# மதுரை ஒலிம்பிக் அகாடமி

## இளையோரின் ஆற்றல் ஏற்றம் பெறட்டும்!





இந்தியாவின் விளையாட்டுத் தலைநகரமாக உருவெடுத்துள்ளது தமிழ்நாடு. கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் இருந்து நூற்றுக்கணக்கான விளையாட்டு வீரர்கள், மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்து வருகின்றனர். தேசிய அளவிலான போட்டிகளில் புதிய புதிய சாதனைகளை, எட்டி வருகின்றனர். அதற்குக் காரணம், முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு. விளையாட்டுத் துறை அமைச்சராகவும், பின்னர் துணை முதலமைச்சராகவும், விளையாட்டுத் துறையில் தனி கவனம் செலுத்திய உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கடும் உழைப்பும் அந்த சாதனைகளுக்குப் பின்னால் உள்ளன.





தமிழ்நாட்டின் விளையாட்டு வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்க பயிற்சி பெறும் வகையில், தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட விளையாட்டு வளாகங்களிலும் சர்வதேசத் தரத்திலான உடற்பயிற்சிக்கூடங்கள், உள்ளரங்க மைதானங்கள், அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் முதலமைச்சர் சிறு விளையாட்டு அரங்கம், உள்ளரங்க வாலிபால், கூடைப்பந்து மைதானங்கள், கபடி, குத்துச்சண்டை மைதானங்கள், சர்வதேசத் தரத்திலான நீச்சல் குளங்கள், ஹாக்கி மைதானங்கள் என நவீன விளையாட்டுக் கட்டமைப்புகளை உருவாக்கியதன் விளைவுதான் இந்தச் சாதனைகள்.

3 % இடஒதுக்கீட்டின்கீழ், 70 மாற்றுத்திறனாளிகள் உள்பட 301 விளையாட்டு வீரர்களுக்குப் பணி நியமனங்கள், ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்களுக்கு ரூ.215.78 கோடிவரை உயரிய ஊக்கத்தொகை, சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி - 2022, சர்வதேச மகளிர் டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டி-2022, ஸ்குவாஷ் உலக கோப்பை - 2023, ஃபார்முலா-4 கார் பந்தயம்-2024, சென்னை ஓபன் சர்வதேச மகளிர் டென்னிஸ்-2025 என உலகளாவிய போட்டிகளை நடத்தியதும் விளையாட்டுத் துறை வளர்ச்சிக்கான சூழலை உருவாக்கியுள்ளன. அந்த ஊக்குவிப்பின் மகுடமாக அமைக்கப்பட்டதுதான், மதுரை ஒலிம்பிக் அகாடமி.

### சட்டமன்றத்தில் அறிவிப்பு

மதுரையில் 24 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது, மதுரை மாவட்ட விளையாட்டு வளாகம் (ரேஸ்கோர்ஸ் மைதானம்). ஹாக்கி, கால்பந்து, டென்னிஸ், கபடி ஆகியவற்றுக்குப் பயிற்சி பெறுவதற்கான மைதானங்கள், இறகுப்பந்து, டேபிள் டென்னிஸ் விளையாட்டுகளுக்கு உள்விளையாட்டு அரங்கங்கள் உள்ளன. ஆனால், அவை, உயர்சிறப்பான பயிற்சிக்குப் போதுமானதாக இல்லாத நிலையில், 2023-ஆம் ஆண்டில் விளையாட்டுத் துறை அமைச்சராக சட்டமன்றத்தில் பேசிய துணை முதலமைச்சர் உதயநிதி அவர்கள், அந்த மைதானங்கள் ரூ.8.10 கோடியில் புதுப்பிக்கப்படும் என அறிவித்தார். கூடவே, மதுரை மாவட்டத்தில் உயர்திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் ஒலிம்பிக் பதக்க மேடையை அடைவதற்குத் தேவையான அனைத்து வசதிகளும் கொண்ட ஒலிம்பிக் அகாடமி அங்கு அமைக்கப்படும் என அறிவித்தார்.

அந்த மைதானத்தில் ஏற்கெனவே 25 மீட்டர் நீளத்துக்கு 8 டிராக் நீச்சல் குளம் இருந்தது. இங்கு பயிற்சி பெறும் வீரர்கள் தேசிய அளவிலான பதக்கங்களைப் பெற்றாலும், தேசிய அளவிலான போட்டிகளில் 50 மீட்டர் நீச்சல் குளத்தில் வெற்றி வாய்ப்புகளில் சவால்களைச் சந்திக்கின்றனர். இதற்குத் தீர்வாக, ஒலிம்பிக் அகாடமியில் சர்வதேச நீச்சல் குளம் அமைக்க வேண்டும் என அ.தி.மு.க. ஆட்சிக்காலத்திலேயே தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் திட்டத்தினை அளித்துள்ளது. ஆனால், அதற்கு ஒப்புதல் கிடைக்கவில்லை. ஒலிம்பிக் அகாடமியில் அந்த நீச்சல் குளம் அமைக்கவும் அறிவிப்பினை வெளியிட்டார் உதயநிதி ஸ்டாலின்.

> "இந்த அகாடமி, வீரர்களின் கனவு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் கனவு. முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் அந்தக் கனவை தூக்கிச் சுமக்கின்றனர்."

### நவீன கட்டமைப்புகள்

அதையடுத்து, 2024-ஆம் ஆண்டில் ஒலிம்பிக் அகாடமி பணிகள் தொடங்கப்பட்டன. கபடி மற்றும் டேபிள் டென்னிஸ் விளையாட்டினை ஊக்குவிக்கும் வகையில், தரைதளத்தில் ஒரு கபடி ஆடுகளம், முதல் தளத்தில் 6 எண்ணிக்கை கொண்ட டேபிள் டென்னிஸ் ஆடுகளம் கொண்ட 250 இருக்கைகளுடன் கூடிய உள்விளையாட்டரங்கம் மற்றும் ஆண், பெண் உடைமாற்றும் அறைகள் கொண்ட வசதியுடன் ஒலிம்பிக் அகாடமி உருவானது.

மேலும், நவீன வசதிகளுடன் கொண்ட புதிய உடற்பயிற்சிக்கூடம், ஏற்கெனவே இருந்த திறந்தவெளிக் கூடைப்பந்து ஆடுகளம் செயற்கைத் தரையமைப்பு ஆடுகளமாகவும், ஏற்கெனவே இருந்த மூன்று திறந்தவெளி டென்னிஸ் ஆடுகளங்கள் செயற்கைத் தரையமைப்புடன் கூடிய புதிய டென்னிஸ் ஆடுகளங்களாகவும் மாற்றியமைக்கப்பட்டன. ஏற்கெனவே, இருந்த 25 மீட்டர் நீச்சல் குளம் அருகிலேயே 50 மீட்டர் நீளம், 25 மீட்டர் அகலத்தில் 6 அடி ஆழத்திற்கு 10 டிராக் வரிசையில், சர்வதேசப் போட்டிகள் நடத்தும் வகையில் நீச்சல்குளம் உருவாகி வருகிறது.

ஒலிம்பிக் பதக்கத்தை, தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள் அடைவதற்கு தேவையான அனைத்து வசதிகளும் கொண்ட இந்த ஒலிம்பிக் அகாடமியை, 2026-ஆம் ஆண்டு, மார்ச் 5-ஆம் தேதி துணை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, விளையாட்டு வீரர்களுடன் கலந்துரையாடினார்.

இந்த அகாடமி, வீரர்களின் கனவு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் கனவு. முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், தமிழ்நாட்டு இளைஞர்களின் ஆற்றல் சிதறுவதைத் தடுத்து, அவர்களை மன உறுதி கொண்டவர்களாகவும், ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபடவும், எதிர்கால வாழ்வை நம்பிக்கையோடு எதிர்கொள்பவர்களாகவும் உருவாக்கும் பெரும் பொறுப்பைத் தூக்கிச் சுமக்கின்றனர். அதன் அடையாளங்களில் ஒன்றுதான் மதுரை ஒலிம்பிக் அகாடமி. இளையோரின் ஆற்றல் திராவிட மாடலுடன் ஏற்றம் காண வேண்டும்.

**...சாதனை தொடரும்**

## தமிழ்நாட்டின் வளர்ச்சி பா.ஜ.க.வுக்கு உறுத்துகிறது!

தமிழ்நாட்டின் வளர்ச்சி அரசியல், வட இந்தியாவில் பா.ஜ.க.வின் மதவாத அரசியலை பாதிக்கிறது. அதனால்தான் தி.மு.க.வை வீழ்த்தத் துடிக்கிறது பா.ஜ.க. எனப் பதிவிட்டுள்ளார் சங்கர் ராஜரத்தினம் என்பவர்.

"பி.ஜே.பி. தமிழகத்தில் வளர்வது முக்கியம் என்று அண்ணாமலையை வளர்த்து, அவர் சொன்னபடி அ.தி.மு.க.வை ஒதுக்கி, 2024-ஆம் ஆண்டு, நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிட்ட பி.ஜே.பி. அதனால், தன் தமிழக வாக்குவங்கி வளர்ந்தது என்று சொல்லிக்கொண்ட பி.ஜே.பி. 2026-ஆம் ஆண்டு, தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு அ.தி.மு.க.வுடன் கூட்டணி அவசியம் என்று 'டெஸ்பரேட்' (நம்பிக்கையற்ற நிலைக்குள்ளாவது) ஆனது ஏன்..?

நாடாளுமன்றத் தேர்தலில் ரிஸ்க் எடுத்த பி.ஜே.பி., தமிழக சட்டசபைத் தேர்தலுக்கு, அண்ணாமலையை பலி கொடுத்தேனும், கூட்டணி மிக அவசியம் என்று நினைத்தது ஏன்..? தன் வசமிருந்த அத்தனை மிரட்டல்களையும் உபயோகித்து, எடப்பாடியின் கை, கால், வாயைக் கட்டித் தூக்கி வந்து, கட்டாயக் கல்யாணம் போல கூட்டணி அறிவித்ததே பி.ஜே.பி., ஏன்..? 80 தொகுதிகள் என்று பேசிக்கொண்டிருந்து பின்னர், 27 தொகுதிகளுக்கே ஒப்புக் கொண்டு, தான் எதை இழந்தாலும் பரவாயில்லை, தமிழகத்தில் தன் கூட்டணிக்கட்சி ஆட்சியில் இருக்க வேண்டும் என்று பி.ஜே.பி. எதற்காக அவ்வ்வ்ளோ 'டெஸ்பரேட்' ஆகிறது..?

தயவுசெய்து இதை யோசியுங்கள்..! பாரபட்சமின்றி இதைத் தீர யோசியுங்கள்..! யோசித்தால் புரியும்.

இந்தியாவின் ஜி.டி.பி. (GDP) 6.8 சதவிகிதத்தைத் தாண்ட முக்கும்போது, தமிழ்நாட்டின் ஜி.டி.பி. (GDP)யோ : 11.2%..!

நம் Per Capita விகிதம்: 13.35%..! The Best In India..!

பி.ஜே.பி. தன் வட இந்தியக் கோட்டைகளைத் தக்க வைத்து, அதன் மூலம் மத்தியில் பி.ஜே.பி. ஆட்சி நிலைக்க வேண்டுமானால், அதற்கு தி.மு.க.வை இங்கே அகற்றியாக வேண்டியது அவசியமாகி விட்டது..! அதுதான் பி.ஜே.பி.யின் டெஸ்பரேஷனுக்குக் காரணம்..!" எனப் பதிவிட்டுள்ளார்.

டெல்லியின் இந்தச் சதிவலைகளை அறுத்து, தமிழ்நாடு நிச்சயம் வெல்லும்... பா.ஜ.க.வும் பழனிசாமியும் மீண்டும் தோற்பார்கள். திராவிட மாடல் தந்த தமிழ்நாட்டின் வளர்ச்சி அதை உறுதிசெய்யும்.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவருடன், அம்மாவையும் சந்தித்த தருணம்!



ரூபாவதி பூபதி

2003-ஆம் ஆண்டு, மே மாதம் கோபாலபுரம் இல்லத்தில், முத்தமிழறிஞர் கலைஞரையும், என்னை ஈன்று பெறாத தாய் தயாளு அம்மாவையும் சந்தித்து மகிழ்ந்த தருணம். என் மகள் அஞ்சுகம் பூபதிக்கு மருத்துவ படிப்பு வேண்டி, குடும்பத்துடன் தலைவரைச் சென்று சந்தித்தோம். அருகில் என் கணவர் தஞ்சை பூபதி, மகள் அஞ்சுகம், மகன் ராஜராஜன் ஆகியோர். என் மகளின் மருத்துவப் படிப்புக்கு அடித்தளம் இட்ட புகைப்படம் நீங்கா நினைவுகளைக் கொண்டது.

**– ரூபாவதி பூபதி,**
**குறிஞ்சி நகர், புதிய வீட்டு வசதி வாரிய குடியிருப்பு,**
**தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## குரு வாக்கியம்

### நுணுக்கமாக சிந்திக்கும் காலம்!

1967-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் பேரறிஞர் அண்ணா, முதலமைச்சரான பின்னர், புதுடெல்லிக்குச் சென்றவர் நாடாளுமன்றத்தின் மைய மண்டபத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். "மத்திய அரசாங்கம் அனுபவித்து வரும் அதிகாரங்கள் மாநில அரசுகளுக்குத் திரும்ப வேண்டும், அரசியல் சட்டத்தின் செயல்பாட்டைப் பற்றி, மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் நுணுக்கமாகச் சிந்திக்கும் காலம் வந்துவிட்டது" என்று குறிப்பிட்டார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900